வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 24.06.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- பாதுகாப்புச் சவால்கள் விரிவடைந்து வருவதை எதிர்க்க, உலக நாடுகள் இடையே, வலுவான ஒத்துழைப்புத் தேவை என்று, பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டாக வலியுறுத்தி உள்ளனர்
- போதைப் பொருள் தடுப்புப் பணிகளுக்கான, N-CORD ஒருங்கிணைப்பு மையத்தின், உச்சநிலைக் கூட்டம், , மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில், புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது.
- கடந்த காலாண்டில் இந்தியாவின் மொத்த வர்த்தகம், 5.4 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து இருப்பதாக, நிதி ஆயோக் துணைத் தலைவர் டாக்டர் A.K. லஹிரி தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில், மாநில சுகாதார சங்கத்தில் பணிபுரியும் 691 ஒப்பந்த ஊழியர்களுக்கு, ஊதியம் உயர்த்தப் பட்டுள்ளது.

<u>*பிரிக்ஸ் (10)*</u>

தீவிரவாதம், சைபர் மிரட்டல் போன்ற பல வடிவங்களில் உலகின் பாதுகாப்புச் சவால்கள் விரிவடைந்து வருவதை, திறம்பட்ட முறையில் எதிர்க்க, உலக நாடுகள் இடையே, வலுவான ஒத்துழைப்புத் தேவை என்று, பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள், கூட்டாக வலியுறுத்தி உள்ளனர். புதுடெல்லியில், இந்தியாவின் சார்பில் நடைபெற்ற, பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாட்டில், இவ்வாறு வலியுறுத்தப் பட்டது. புதிய

பாதுகாப்பு சாவல்களுக்கு தீர்வு காண்பதில், பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே, கூட்டு விவாதங்களும், பரஸ்பர ஒத்துழைப்பும் அதிகரிக்க வேண்டுமென, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல், இம்மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

***ஈரான் நிலவரம்-1 (3)***

ஈரானில் பாதுகாப்பு நிலவரங்கள் மேம்பட்டு வருவதை கருத்தில் கொண்டு, டெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம், இந்தியர்களுக்கு, திருத்தப்பட்ட அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

***ஈரான் நிலவரம்-2 (13)***

(வாய்ஸ்)

இந்தியர்கள் இனி, ஈரானுக்கு பயணம் மேற்கொள்வது குறித்து, பரிசீலிக்கலாம் என்றாலும், அவசியத் தேவை அல்லாத பயணங்களை, தொடர்ந்து தவிர்க்க வேண்டும் என, தூதரகம் அறிவித்துள்ளது. அவசியமாக ஈரானுக்கு பயணம் மேற்கொள்ளத் தேவை ஏற்பட்டால், அதிகபட்ச எச்சரிக்கை மற்றும் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்றும், நிலவரங்களை தொடர்ந்து கண்காணித்து, உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றி நடக்க வேண்டும் என்றும், தூதரகம் தெரிவித்துள்ளது. தற்போது ஈரானில் உள்ள இந்தியர்களும் அவசர காரணங்களின் பேரில் ஈரானுக்கு வந்து சேரும் இந்தியர்களும் தங்களைப் பற்றிய விவரங்களை, இயன்றவரை விரைவாக. தூதரகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக உதவிகள் தேவைப்பட்டால் டெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகத்தை தொடர்பு கொள்ள, அவசரகால தொலைபேசி எண்களும் அறிவிக்கப் பட்டுள்ளன.

***பாஸ்போர்ட் (11)***

இரண்டாம் கட்ட பாஸ்போர்ட் சேவை திட்டம், மைக்ரோ சில்லுடன் கூடிய இ-பாஸ்போர்ட் அறிமுகம், புதிய பாஸ்போர்ட் கேந்திரங்களின் திறப்பு, மற்றும், சாதனை அளவிலான பாஸ்போர்ட் விநியோகத்தால், உலக அளவில் நாட்டு மக்களுக்கான பயண வாய்ப்புகள் மற்றும் இதர வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். 14ஆவது பாஸ்போர்ட் சேவை தினத்தை ஒட்டி, இன்று, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். எளிமையான, வெளிப்படையான முறையில், பாஸ்போர்ட் சேவைகளை விரைந்து வழங்குவதன் மூலம், மக்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதில், அரசின் உறுதிப்பாடு தொடர்வதாக, அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

***இரும்பு – எஃகு (9)***

இரும்பு – எஃகு தொழில்துறையினர் எதிர்கால வளர்ச்சிக்கான முக்கியத் தூணாக, டிஜிட்டல் மயத்தை ஏற்க வேண்டும் என, மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. H.D. குமாரசுவாமி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் இது குறித்த சிந்தனை அரங்கில் அவர் பேசுகையில், 2018ஆம் ஆண்டு முதல் இந்தியா, உலகின் இரண்டாவது எஃகு உற்பத்தி நாடாக திகழ்வதாகக் கூறினார். இரும்பு – எஃகுத் துறையில், உற்பத்தித் திறன், பராமரிப்புத் தரம், மற்றும், பாதுகாப்பை மேம்படுத்த, செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், ரோபோட்டிக்ஸ், டேட்டா பகுப்பாய்வு போன்ற நவீன தொழில்நுட்பங்கள் அவசியம் என்று, அவர் வலியுறுத்தினார்.

*அமித் ஷா (17)*

போதைப் பொருள் தடுப்புப் பணிகளுக்கான, N-CORD ஒருங்கிணைப்பு மையத்தின், 10ஆவது உச்சநிலைக் கூட்டத்தை, நாளை புதுடெல்லியில், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தலைமையேற்று நடத்துகிறார். போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கூட்டத்தில், மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள், மற்றும், சட்ட அமலாக்க அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப் படுத்துவதற்கான, முயற்சிகளை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்க உள்ளனர். போதைப் பொருள் ஒழிப்புப் பணிகளில், 2029ஆம் ஆண்டிற்குள் எட்டப்பட வேண்டிய இலக்குகள் குறித்த தொலைநோக்கு அறிக்கையை, மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா இந்நிகழ்ச்சியின் போது வெளியிடுவார். போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் மண்டல அலுவலகங்களுக்காக, ஜம்மு மற்றும் குவஹாத்தியில் கட்டப் பட்டுள்ள புதிய கட்டிடங்களையும், மத்திய அமைச்சர் நாளை, மெய்நிகர் முறையில் திறந்து வைக்கிறார். நாடு முழுவதும், போதைப் பொருள் தடுப்பு பணிகளின் போது பறிமுதல் செய்யப்பட்ட, 2 லட்சத்து 9 ஆயிரத்து 500 கிலோ போதைப் பொருட்களை சட்டப்படி எரித்து அழிப்பதற்கான, 2 வார இயக்கம் ஒன்றும், நாளை முதல், தொடங்க உள்ளது.

*இளைஞர் – நாடாளுமன்றம் (6)*

கேந்திரிய வித்யாலயா மாணவர்களுக்கான 36ஆவது தேசிய இளையோர் நாடாளுமன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், நாளை புதுடெல்லியில் நடைபெறும் விழாவில் பரிசுகளை வழங்கவிருக்கிறார். நாட்டின் 25 KVS மண்டலங்களில் இருந்து, 200 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள், இம்முறை, இளையோர் நாடாளுமன்ற போட்டிகளில் பங்கேற்றன.

*வர்த்தகம் (7)*

கடந்த காலாண்டில் இந்தியாவின் மொத்த வர்த்தகம், 5.4 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து இருப்பதாக, நிதி ஆயோக் துணைத் தலைவர் டாக்டர் A.K. லஹிரி தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், வர்த்தக கண்காணிப்புத் தொடர்பான காலாண்டு அறிக்கையை வெளியிட்டுப் பேசுகையில், அவர் இதைத் தெரிவித்தார். கடந்த காலாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி, 1.84 டிரில்லியன் டாலர் என்னும் அளவை எட்டி இருப்பதாகவும், இறக்குமதி, 6.5 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

*புதுச்சேரி – சம்பளம் -1 (2)*

புதுச்சேரியில் மாநில சுகாதார சங்கத்தில் பணிபுரியும் 691 ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் உயர்த்தப் பட்டுள்ளது.

*புதுச்சேரி – சம்பளம் -2 (11)*

(வாய்ஸ்)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பகுதிகளிலும், மாநில சுகாதார சங்கத்தில் பணிபுரியும், ஒப்பந்த செவிலியர்களுக்கான மாத ஊதியம் 15 ஆயிரம் ரூபாயாகவும், ANM துணை செவிலியர்களுக்கான ஊதியம் 12 ஆயிரம் ரூபாயாகவும், இதர ஒப்பந்த ஊழியர்களுக்கான ஊதியம் 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என, சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. புதுச்சேரி சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு முதலமைச்சர் திரு. ரங்கசாமி அளித்த வாக்குறுதியின் பேரில், ஊதியங்கள் இவ்வாறு உயர்த்தப் பட்டுள்ளன. இதற்கான ஆணையை, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். உயர்த்தப் பட்ட ஊதியம், இவ்வாண்டு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் கணக்கிடப் பட்டு, அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளதாகவும், சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி – வேளாண்மை (8)*

கோவை கொடிசியா மைதானத்தில் நடைபெற உள்ள அக்ரி இண்டெக்ஸ்-வேளாண் வர்த்தக கண்காட்சியைப் பார்வையிட, புதுச்சேரியில் இருந்து 50 தோட்டக்கலை விவசாயிகளை அழைத்துச் செல்ல, தோட்டக்கலைத் துறை ஏற்பாடு செய்துள்ளது. அக்ரி ஸ்டாக்-கில் பதிவு பெற்று, கடந்த 2 ஆண்டுகளில், கண்டுணர்வு சுற்றுலா செல்லாத தோட்டக்கலை விவசாயிகள், வரும் 26ஆம் தேதிக்குள், இதற்கு பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. 50க்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்தால், குலுக்கல் முறையில், சுற்றுலாவிற்கு ஆள் தேர்வு நடைபெறும் என்றும் தோட்டக்கலைத் துறை தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி – காப்பீடு (18)*

சாலை விபத்தில் பாதிக்கப்பட்டு, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நிதியுதவி வழங்குவதற்கான, மத்திய அரசின் பிஎம்-ராஹத் திட்டம், புதுச்சேரியில் இவ்வாண்டு பிப்ரவரி மாதம் முதல் அமலாகி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, காப்பீடு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான விபத்து காப்பீடாக, பொதுக் காப்பீட்டு கவுன்சில் மூலம் ஐந்தரை லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. காப்பீடு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் அடையாளம் தெரியாத வாகனங்களால் ஏற்பட்ட விபத்துகள் குறித்த வழக்குகளுக்கான நிதியாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்திடம் இருந்து, இதுவரை, மொத்தம் 12 லட்சம் ரூபாய் பெறப்பட்டு, இதில், 6 லட்சம் ரூபாய் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. மேலும், பிம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஒரு நோயாளிக்கான தொகையை, இன்று, மாவட்ட ஆட்சியர் வழங்கினார். சாலை விபத்துகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு, உடனடி சிகிச்சை கிடைப்பதையும், சம்பந்தப்பட்ட குடும்பங்களின் பொருளாதாரச் சுமை குறைவதையும் உறுதிப்படுத்த, புதுச்சேரி அரசும் – மாவட்ட நிர்வாகமும், தொடர்ந்து நடவடிக்கை எடுத்து

வருவதாக, சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் செல்வேள், செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*வானிலை (12)*

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று தமிழகத்தின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வடக்கு உட்புற தமிழகத்தின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 30ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கடலூர் மற்றும் சென்னை நுங்கம்பாக்கத்தில், 38.7 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*வானிலை – சேர்க்கை (4)*

இதற்கிடையே, தென்மேற்கு பருவமழை மகாராஷ்டிர மாநிலத்திற்கு பரவி உள்ள நிலையில், இன்று, மும்பை உள்ளிட்ட மகாராஷ்டிர பகுதிகளில், கனமழை பதிவாகி உள்ளது. மும்பை, தானே நகரங்கள் மற்றும் கொங்கண் பிராந்தியத்திற்கு, இன்று, கனமழை குறித்த ஆரஞ்சு எச்சரிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

*__கால் பந்து (6)__*

FIFA உலகக் கோப்பை கால்பந்துப் போட்டித் தொடரில், இன்று இரவு 12.30 மணிக்கு, வான்கூவரில் நடைபெறும் போட்டியில், சுவிட்சர்லாந்து – கனடா அணிகளும், சியாட்டிலில் நடைபெறும் போட்டியில், கத்தார் – போஸ்னியா ஹெர்சகோவினா அணிகளும், மோத உள்ளன. போர்ச்சுகல் – உஸ்பெகிஸ்தான் அணிகளுக்கு இடையே, நேற்று இரவு ஹூஸ்டனில் நடைபெற்ற போட்டியில், போர்ச்சுகல் அணி, 5க்கு - பூஜ்யம் என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

*__கொல்கத்தா விபத்து (6)__*

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில், தாராதலா அருகே இன்று, கட்டுமான நிலையில் உள்ள கிடங்கு கட்டிடம் இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில், 3 தொழிலாளர்கள், இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். காயமடைந்த ஐவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளனர். இடிபாடுகளில் சிக்கி உள்ள மற்றவர்களை மீட்கும் பணிகளில், தேசிய பேரிடர் மீட்புப் படையினர், காவல் மற்றும் தீயணைப்புப் படையினர், இணைந்து ஈடுபட்டுள்ளனர்.